**செ.வெ.எண் - 06** **நாள்: 03.03.2020**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு தலைமை மருத்துவமனையில் உலக செவித்திறன் நாளை முன்னிட்டு 04 செவித்திறனற்ற நபர்களுக்கு காதுகேட்கும் கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

முன்னதாக, உலக செவித்திறன் நாளை முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

நமது மாவட்டத்தில் தேசிய செவித்திறன் தின விழிப்புணர்வு பிரச்சாரமானது உலக செவித்திறன் தினம் 03.03.2020 முதல் 16.03.2020 அன்று வரை நடைபெறவுள்ளது. காது கேளாமை பற்றிய விழிப்புணர்வை அனைவரும் அறிந்து கொள்ள செவித்திறன் தினம் கொண்டாடப்படுகிறது. இதனைத்தொடர்ந்து அரியலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு வரும் செவித்திறனுடைய நபர்களுக்கு பரிசோதனை செய்தும், மருத்துவர்களுக்கு தகவல் தெரிவிக்கும் நபர்களை அறிந்து அவர்களுக்கும் காதுகேட்கும் கருவிகள் வழங்கப்படவுள்ளது.

குழந்தை பிறப்பின்போது ஏற்படும் சிக்கல்கள், குறிப்பிட்ட சில தொற்றுநோய்கள், காதுகளில் ஏற்படும் நோய்கள் மருந்துகளால் மற்றும் அதிக ஒலியால், முதுமையால் செவித்திறன் பாதிப்படைதல் இவையாவையும் உரிய நேரத்தில் கண்டறிந்து தடுப்பதன் மூலமாகவும், மருத்துவ சிகிச்சை மூலமாகவும் குணப்படுத்தலாம்.

சிறு வயதிலேயே இக்குறையை கண்டறிந்தும், அதற்குரிய சிகிச்சையை அளித்தல் வேண்டும். காதுகேளாமை எனும் சந்தேகம் வந்தால் உடனடியாக அரசு மருத்துவமனைகளில் அதனை கண்டறியும் பரிசோதனைகள் செய்து உரிய சிகிச்சையை பெறுதல் வேண்டும். நாட்டின் கேட்கும் திறனை வளப்படுத்தி, நம் நாட்டை செவித்திறன் கேளாமை கோளாறுகளிலிருந்து விடுவிப்போம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி தலைவர் மரு.முத்துகிருஷ்ணன், தலைமை மருத்துவ அலுவலர் ரவிசங்கர், மண்டல மருத்துவ அலுவலர் ரமேஷ், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பொம்மி மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**